ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2192/3 - 2020 සැප්තැම්බර් මස 07 වැනි සඳුදා - 2020.09.07
*2192/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் பொலன்னறுவை மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

பொலன்னறுவை மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் பதவி, அனுமதி பெறாது தொடர்ச்சியாக மூன்று சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ், பொலன்னறுவை மாநகர சபையின் இலக்கம் 11, கதுறுவெல வட்டாரத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பக்கீர் மொஹிதீன் சாஹுல் ஹமீது என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக் கட்சியைச் சேர்ந்தவருமான பொலன்னறுவை மாநகர சபையின் இலக்கம் 11 கதுறுவெல வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஊடாபல கமரால்லாகே ரத்னசிறி கமகே என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது, பொலன்னறுவை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான பியுமி ஆடிகல ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஊடாபல கமரால்லாகே ரத்னசிறி கமகே என்பவர் பொலன்னறுவை மாநகர சபையின் இலக்கம் 11, கதுறுவெல வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பியும் ஆடிகல,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
பொலன்னறுவை மாநகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, செத்தெம்பர் 07.

9-485

1A - G 32811— 30 (2020/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*